அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : எவ்வளவு கேள்விகள் பதில் சொல்லப் படாமல் இருக்கின்றன என்று ஆராய்ந்து, அவை 750 கேள்விகள் என்று கணக்கெடுத்து, அவை எந்தெந்த அமைச்சர் சம்பந்தப்பட்டவை என்றெல் லாம் ஆராய்ந்து, அந்தந்த அமைச்சருக்கு நானே தனியாகக் கடிதம் எழுதி, அந்தக் கேள்விகளுக்கு உடனடியாக பதில் சேகரித்துத் தரவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டு, அந்த முறையில் அவர்களும் முயற்சி செய்து, அந்த இலாகாவினருக்குத் தெரிவித்து அவர்களும் விடை அளித்தார்கள். ஆரம்பத்தில் 20, 25 கேள்விகளாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இப்போது 10-ல் நின்றுகொண்டிருக்கிறது. இதில் அமைச்சர்களும் அந்தந்த இலாகாவினரும் நம்முடன் ஒத்துழைப்பது நல்லது என்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Seven demands of the Tamil Nadu Elementary School Teachers Federation

*2 S.N. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Elementary School Teachers Federation has submitted a Charter of seven demands to the Hon. the Chief Minister; and

(*b*) if so, the action taken by the Government on the demands?

தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனத்தின் ஏழு கோரிக்கைகள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனம், ஏழு கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை, மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அக்கோரிக்கைகள் குறித்து அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

1973 ஏப்ரல் 2]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அவையில் அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த ஏழு கோரிக்கைகள் என்பது வெள்ளிவிழா மகாநாட்டில் நடந்த தீர்மானத்தையொட்டி இப்போது சமீபத்தில் கல்வி அமைச்சர்களிடத்திலும் முதலமைச்சர் அவர்களிடத்திலும் கொடுக்கப்பட்டவையாகும். ஆனால் அறிக்கையில் 1969-ம் ஆண்டில் நடைபெற்ற மகாநாட்டினுடைய கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் கொடுக்கப்பட்ட விஷயம் பற்றி நான் தேதியிட்டுக் குறிப்பிட்டுக் கேட்டிருந்தேன். அதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் சமீபத்தில் கொடுக்கப்பட்ட ஏழு கோரிக்கைகளுக்கான பதிலை இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளையாவது அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதைக் குறிப்பிட்டு தனியாகக் கேட்பார்களேயானால், அது பற்றிய விவரங்களைத் தர முடியும். இன்ன சமயத்தில் இந்தக் கோரிக்கைகள் கேட்கப்பட்டன, இது சம்பந்தமாக இன்னின்ன கேள்விகளுக்கு இன்னின்ன கோரிக்கைகளுக்கு விளக்கம் வேண்டுமென்று கேட்டால், அதுபற்றிய விவரங்கள் தர முடியும். தனியாக ஒரு கேள்வி போட்டால், அதைத் திரட்டித் தரலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, நான் குறிப்பிட்டுக் கேள்வி போட்டதே, முதலமைச்சர் அவர்களிடத்திலும் கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும் சமீபத்தில் கொடுத்து செலக்ட் கமிட்டியில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது பற்றிதான். அதில் முக்கியமாக அகவிலைப் படியைப் பணமாக ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களுக்கும் ஊதிய விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும், இன்னும் தனியார் பள்ளி ஆசிரியர்களுடைய பாதுகாப்புச் சட்டம் 3—9—1969 லிருந்து, முன்தேதியிட்டு வழங்கப்படவேண்டுமென்றும் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கக்கூடிய முறையில், தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணிக்கு எதிராக எந்தச் சங்கமும் அமைக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாதென்றும் இப்படிப்பட்ட ஏழு கோரிக்கைகள் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன என்று தெரிவித்துக்

@ 122-126-ம் பக்கங்களில் இணைப்பு II -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கொள்ளுகிறேன். அதைப் பற்றி நாளையதினம் முடியுமானால், சமீபத்தில் கொடுத்த விண்ணப்பத்தை வைத்து, பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாளை முடியுமானால் என்று சொன்னால், நாளை முடியும் என்று சொல்லுவதற்கில்லை. கேள்வி ரூபத்தில் போட்டால், அது பற்றிய விவரங்களைச் சொல்லுவதற்கு முயற்சி எடுக்கலாம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

உணவு அமைச்சர் கொள்கை பற்றிய அறிவிப்பை அவை நடக்கும் போது வெளியே வெளியிட்டது குறித்து

MR. CHAIRMAN : I have received notices of motions from Thiruvalargal G. Swaminathan and A. R. Damodaran to raise matters of privilege under rule 157 of the Council Rules, namely, (i) Thiru G. Swaminathan :

"இந்த அவை நடந்து கொண்டிருக்கும்போது, மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள், மதுரையில் நிருபர்களிடத்தில் நேற்றையதினம் (30—3—1973) பேசுகையில், நெல் அரிசி மொத்த விற்பனையை அடுத்துவரும் அறுவடைக் காலத்திலிருந்து (ஐப்பசி—கார்த்திகை) ஏற்க, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்று கூறியுள்ளார். இது மிக முக்கியமான, மக்களைப் பாதிக்கும்படியான கொள்கையாகும். சட்ட மன்றம் நடந்துகொண்டிருக்கும்போது, முக்கியமான கொள்கை விளக்கங்களை மன்றத்திலேயே அளிக்கப்பட வேண்டுமென்பது விதியாகும். இதற்கு மாறாக உணவு அமைச்சரவர்கள், இந்த முக்கியமான அறிவிப்பை மேலவையில் தெரிவிக்காமல், நிருபர்களிடம் கூறியது, உரிமை மீறிய செயலாகும்".

(ii) Thiru A. R. Damodaran : "The policy announcement made by the Food Minister, Hon. Thiru Mannai P. Narayanaswami at Madurai to the press even while this House was in session and reported in the Press to-day (31-3-1973) regarding the take-over of the entire retail trade of kerosene by the Government of Tamil Nadu, especially when no indication of this policy was given either in the Budget or when the Policy Note on Food was taken